பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 12 திங்கட்கிழமை 26.05.2025 கதிர் 198

### இது ரகசியம் அல்ல!

திசைகாட்டிக்குள் ஏற்பட்டுள்ள புகைச்சல் குறித்து நேற்று இந்தப் பத்தியில் சில விடயங்களைக் குறிப்பிட்டிருந்தேன். அதன் தொடர்ச்சியாக மேலும் சில ☞ 2

## ஒட்டுமொத்த பொதுச் சேவையினரும் மாற்றத்தை நோக்கி செயற்படவேண்டும்

### சுகாதார அமைச்சர் வேண்டுகோள்

இந்த நாட்டை மாற்றுவதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறோம். நாட்டின் எதிர்காலம் குறித்து எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கைகளை நிறைவேற்ற ஆளும்தரப்பு மாத்திரமல்ல சுகாதார துறை உட்பட ஒட்டுமொத்த பொது சேவையும் அந்த இலக்கை நோக்கிச் செயல்பட வேண்டும் என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

3147 தாதியர்களுக்கு நியமனங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் ☞ 2

## நாடாளுமன்ற ஊழியர்களின் உணவுச் செலவு மறுசீரமைப்பு

நாடாளுமன்றஊழியர்களுக்கானஉணவுவிலைகளில் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் நிர்வாக மற்றும் நிர்வாகம் சாரா ஊழியர்களுக்கான உணவு கட்டணங்களை திருத்தியமைக்க மே 21 நடைபெற்ற நாடாளுமன்ற குழு கூட்டத்தில் திர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த முடிவுகளை மீளாய்வு செய்ய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நாடாளுமன்ற குழு கூட்டம் நடைபெற்றபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாடாளுமன்ற ☞ 2

### 6000 ஏக்கர் காணியை அரசுடமையாக்கும்

# அரச வர்த்தமானியை திரும்பப் பெறாவிட்டால் போராட்டம்தான்

### தமிழ் அரசுக் கட்சி செயலர் அறிவிப்பு

**காணி சுவீகரிப்புக்காக பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானிக்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த வர்த்தமானியை ஆளும்தரப்பு வாபஸ் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம். அவ்வாறு இல்லாவிடின் மக்கள் போராட்டங்களையும் நடத்துவோம். தமது காணிகளை மக்கள் இழக்காமல் இருப்பதற்குரிய சட்ட ஆலோசனைகளையும் இலவசமாக வழங்குகிறோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.**

**2025 மார் 28 அன்று 2430 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் காணி நிர்ணயச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட காணிகளை அரசுடமை** ☞ 2

## பாணந்துறையில் நேற்று சூட்டு சம்பவம்

பாணந்துறை, பின்வத்த, மாதுப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள வீடொன்றின் மீது நேற்று பிற்பகல் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. ☞ 8

## பெண் உட்பட மூவர் கொழும்பில் கைது

### துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில்

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லோலுவவின் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பில் பெண் உள்ளிட்ட மூவர் கொழும்பு குற்றவியல் பிரிவினரால் நேற்று மஹரகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, கைதான மூவரும் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவர்களை மே 29 வரை விளக்கமறியல் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. ☞ 8

## அமைப்பாளர்களின் விலகல் கோபத்தில் எடுக்கப்பட்ட முடிவு

### அதற்கு ஐமச கட்சி காரணமல்லவாம்

கட்சி தொகுதி அமைப்பாளர்களின் பதவி விலகல் அவர்களுக்கு ஏற்பட்ட கோபத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். ஒருசில நாட்களில் அது சரியாகும். இதற்கு கட்சி காரணமில்லை. தேர்தல் முறையே காரணம் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பட்டியல் மூலம் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற ஆசனங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாகவ ஒருசில தொகுதி அமைப்பாளர்கள் பதவி விலகத் தீர்மானித்துள்ளனர். தொகுதியில் அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட முதல் இரண்டு பேரைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கட்சி, தொகுதி அமைப்பாளர்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்திருந்தது. அதேபோன்று பெண்களை நியமிப்பது தொடர்பாகவும் சில அறிவுறுத்தல்களை வழங்கி இருந்தது. அதன் பிரகாரம் அதிகமான இடங்களில் அவ்வாறு செயற்பட்டிருந்தது.

ஜனநாயகம் என்பது மக்களால் அதிகம் விரும்பப்படுகின்றவர்களை தெரிவுசெய்வதாகும். என்றாலும் இந்த முறைமையை 100 வீதம் பின்பற்றும்போது தொதி அமைப்பாளர்கள் பல்வேறு நெருக்கடி நிலைக்கு தள்ளப்படுகின்றனர். தொகுதி அமைப்பாளர் என்ற வகையில் அந்த பிரச்சினையை நானும் எதிர்கொள்கிறேன்.

இந்த தேர்தல் முறையினால் எனக்கு விருப்பமான, வினைத்திறன் மிக்க பலரைத் தெரிவு செய்துகொள்ள முடியாமல் ☞ 2

## சபைகளில் வென்ற உறுப்பினர்களின் பெயர்களுடன் வர்த்தமானி தயாராகிறது

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வட்டார மட்டத்தில் வெற்றிபெற்ற உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் அச்சீட்டுப் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் சில நாட்களுக்குள் இந்த ☞ 8

## துமிந்த சிறை வைத்தியசாலையில்

தங்கமுலாம் பூசப்பட்ட ரி -56 ரக துப்பாக்கி விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவின்படி, முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க வைத்திய பரிசோதனைக்காக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஆணையர் காமினி பி. திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சொகுசு தொடர்மாடி குடியிருப்பு ஒன்றில் பெண்ணிடம் இருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ரி -56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க ☞ 2

## கணக்காய்வாளர் நாயகமாக என்பிபி சார்ந்தவரை நியமிக்க எடுக்கும் முயற்சியின் பின்னணி என்ன?

### ஐக்கிய மக்கள் சக்தி சுசந்தேகம் எழுப்புகிறது

நாட்டின் முக்கிய பொறுப்பாகிய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு இதுவரைகாலமும் கட்சி சார்பற்ற ஒருவரே நியமிக்கப் பட்டிருக்கிறார். ஆனால் தற்போது தனது கட்சி சார்ந்த ஒருவரை நியமிக்க ஜனாதிபதி முயற்சிப்பதன் பின்னணி என்ன என்ற சந்தேகம் எழுகிறது என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் முக்கிய பொறுப்பாகிய கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமித்துக்கொள்ள ஆளும்தரப்புக்கு முடியாமல் போயிருக்கிறது. தனது கட்சி சார்ந்த ஒருவரை நியமிப்பதற்கே ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. அதனாலே இந்த தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னர் பல அரச கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் யாரும் எந்த கட்சியையும் சார்ந்தவர்கள் அல்ல. அப்படியாயின் தனது கட்சி ☞ 2

## எல்லாச் சபைகளிலும் என்பிபியின் ஆட்சியே

### ஜனாதிபதி தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின்படி 152 சபைகளில் தனித்து ஆட்சியமைப்பதற்கான பலம் எம்மிடமிருக்கிறது, எஞ்சிய 115 சபைகளிலும்கூட நாமே ஆட்சியமைப்போம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றத் பிரதிநிதிகளுடன் அலரி மாளிகையில் நேற்று நடந்த சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத்தேர்தல் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

விவரங்கள்தான் இன்றும்.

பிரதமர் ஹரிணியுடன் நேரடியாகத் தொடர்புபட்ட46நாடாளுமன்றஉறுப்பினர்கள் திசைகாட்டியில் உள்ளனர், ஹரிணி பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் இந்த 46 எம்.பி.க்களும் ஹரிணியுடன் சேர்ந்து நாடாளுமன்றத்தில் சுயாதீனாகச் செயற்பட முடிவுசெய்துள்ளனர். தற்போதைய ஆளும்தரப்புஜே.வி.பியால்அல்ல, காம்பஸால் உருவாக்கப்பட்டது என்பது அவர்களின் கருத்து.

தற்போது ஆட்சியிலிருப்பவர்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு அதிகாரம் அல்லது ஆறில் ஐந்து பங்கு அதிகாரம் இருந்தாலும், மிகக் குறுகிய காலத்தில் அனைத்தும் மாறும் என்றும், அதற்கான அனைத்து அடித்தளங்களும் உள்ளே உருவாக்கப்பட்டுவிட்டன என்றும் சமூக ஊடகங்களில் பிரதமர் அணிக்குச் சார்பான பலர் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள்.

இந்தப் பின்னணியில், ஹரிணி கடந்த வியாழக்கிழமை மற்றொரு சர்ச்சைக்குரிய சந்திப்பில் ஈடுபட்டார். அதுதான் நாடாளுமன்றத்தில் அமெரிக்க தூதர் ஜூலி சாங்குடனான சந்திப்பு. கடந்த காலங்களில், பல்வேறு கட்சிகள் ஜூலி சாங் கோட்டாவுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் இருந்தவர் என்று பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியிருந்தன. இந்த நிலையில் ஹரிணிக்கும் சங்கிற்கும் இடையிலான சந்திப்புமீது பலர் சிறப்புக்கவனம் செலுத்தினர். தற்போதைய சூழ்நிலையில் ஜே.வி.பி. இதில் சிறப்பு கவனம் செலுத்தியதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

இதன் தீவிரம் எப்படிப்பட்டதாக இருக்கின்றதுஎன்றால், ஹரிணிபற்றிசிங்களப் பத்திரிகைகளில் வரும் எதிர்மறையான செய்திகளை ஜேவிபியின் அரசியல்பீட உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமானவருணதீப்தராஜபக்சதனது சமூக ஊடகப் பக்கங்களில் உடனடியாகப் பகிர்ந்து கொள்ளும் அளவிற்கு உள்ளது. அதுமட்டுமல்ல அரசியல் சூழ்ச்சிகளுக்குப் பெயர் பெற்ற கொழும்பில் உள்ள ஒரு சிறப்பு கோயிலுக்குச் செல்ல ஹரிணி ஏற்பாடுகளைச் செய்து வருகிறார் என்றும் வருண கூறியிருந்தார். ஹரிணிக்கு இந்தக் கோயிலுடன் தொடர்பை ஏற்படுத்திய ஒருநபரை வருண தனது சமூக ஊடக வலையமைப்பிலும் குறிப்பிட்டிருந்தார். அதன்படி, ஹரிணி இந்தக் கோயிலுக்குச் சென்று யாரைச் சந்தித்தார், அங்கு என்ன விவாதிக்கப்பட்டது என்பது குறித்து பலருக்கு பல கேள்விகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆக மொத்தத்தில் திசைகாட்டிக்குள் புகையத் தொடங்கி தற்போது கனன்றுவரும் நெருப்பிலிருந்து தீ நாக்குகள் எப்போது மேற்கிளம்பப் போகின்றது என்பதுதான் தற்போதுள்ள கேள்வி. எப்படியிருந்தாலும் ஜேவிபியால் தனது முகமூடியை நீண்ட நாட்களுக்கு திசைகாட்டியின் கீழ் மறைத்து வைத்துக்கொண்டிருக்க முடியாது என்பது தெளிவு.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக்கும் அரச அறிவித்தலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது சுமந்திரன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணி திணைக்களத்தால் 2025.03.28 காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி தொடர்பில் மக்களுக்கான நீதி அமைப்பின் ஊடாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த நிர்ணய கட்டளைச் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்தை அடையாளப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்தால் அப்பகுதியில் உள்ள காணி உரிமையாளர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் மூன்று மாத காலத்துக்குள் தமது காணிக்கான உரித்தை உறுதிப்படுத்தவேண்டும். காணி உரித்துக்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 1931ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணி உரித்து தொடர்பில் காணப்பட்ட பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே இந்தச் சட்டம் இயற்றப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீண்ட இடப்பெயர்வுகள் நடந்துள்ளன. இதனால் பலர் தமது காணிக்குரிய ஆவணங்களை இழந்துள்ளனர். அதேபோல் சுனாமி அனர்த்தத்தால் பலர் தமது ஆவணங்கள் மற்றும் உரித்துக்களை இழந்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் அசாதாரண சூழல் தொடர்ந்து காணப்படுகின்றது. மீள்குடியேற்றம் முழுமைப் பெறாத நிலையில் உள்ளது. 1 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்தியாவில் அகதிகளாக வாழ்கின்றனர். இவ்வாறான தீர்க்கப்படாத சிக்கல்கள் காணப்படுகின்ற சூழலில் காணி நிர்ணயச் சட்டத்தை அமுல்படுத்துவது மிக மோசமானதொரு செயற்பாடு.

காணி சுவீகரிப்புக்காக பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானிக்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த வர்த்தமானியை ஆளும்தரப்பு வாபஸ் பெறவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம். அவ்வாறு இல்லாவிடின் மக்கள் போராட்டங்களையும் நடத்துவோம். தமது காணிகளை மக்கள் இழக்காமல் இருப்பதற்குரிய இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகிறோம்.

குறித்த ஏதேனும் காணிக்கு உரிமம் கோருபவரிடம் உள்ள ஏதேனும் ஆவணம் அந்தக் காணிக்கான சட்ட உரித்தை கோருவதற்கு போதுமானதாக அமையுமா, அல்லது காணப்படும் சிக்கல்களுக்கு எவ்வாறான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான சட்ட ஆலோசனைகளையும் வழங்குவோம். மேலதிக சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குத் தயாராகவுள்ளோம்.

இன்றைய தினம் (நேற்று) 20 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் தன்னிச்சையான முறையில் இலவசமாக சட்ட ஆலோசனைகளை வழங்க முன்வந்தனர். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சட்டபீடத்தில் கல்விகற்கும் 15 மாணவர்கள் இந்த சட்ட ஆலோசனை நடவடிக்கைகளில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

எதிர்வரும் நாட்களில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு சட்ட ஆலோசனை நடவடிக்கைகளுக்கு செல்வோம். 2025.03.28 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி வாபஸ்பெறவேண்டும் என்பது எமது பிரதான வலியுறுத்தலாக உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் இந்த வர்த்தமானியைப் பிரசுரித்தது பொருத்தமானதல்ல -- என்றார்.

## துமிந்த சிறை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒட்டுமொத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததாவது:

நாம் மறுமலர்ச்சி காலத்தில் இருக்கிறோம். இந்தநாட்டைமாற்றுவதற்குநாம்அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறோம். நாட்டின்எதிர்காலம்குறித்துஉங்களுக்குமிகுந்த நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கைகளை நிறைவேற்ற ஆளும்தரப்பு மட்டுமல்ல நீங்கள் உட்பட ஒட்டுமொத்த பொது சேவையும் அந்த இலக்கை நோக்கிச் செயல்பட வேண்டும்.

பொதுசேவைமனிதாபிமானபண்புகளுடன் செயற்படும் என்று நம்புகிறோம். பொது சேவை வினைத்திறனாகவும் திறம்படவும் சரியாகவும் மனிதநேயத்துடன் செயற்படாவிட்டால் நாம் எதிர்பார்க்கும் மறுமலர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை நோக்கி நகர முடியாது. நாங்கள் இப்போது அத்தகைய சூழ்நிலையில் இருக்கிறோம்.

இதன் காரணமாகவே தாதியர் சேவையில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான நியமனங்களை வழங்கியுள்ளோம். இன்னும் இரண்டு மாதங்களில் மேலும் 350 பேருக்கு புதிய நியமனங்கள் வழங்கப்படும். அடுத்த மார்ச் மாதத்துக்குள் 2600 பேருக்கு எம்மால் நியமனங்கள் வழங்க முடியும். இன்னும் இரண்டு வருடங்களில் 5500 பேருக்கு நியமனங்கள் வழங்க எதிர்பார்த்துள்ளோம். வெகுவிரைவில் தேசிய தாதியர் பல்கலைக்கழகத்தினை நிர்மாணிக்க உள்ளோம்.

சர்வதேச ரீதியில் எமது சுகாதார ஊழியர்களை ஆளும்தரப்புகளுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்படும் இணக்கப்பாடுகளுக்கு அமைய அவர்களை மாற்றிக்கொள்வதற்கான வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. குவைத்ஆளும்தரப்பு அதற்கான கோரிக்கை முன்வைத்துள்ளது.

எமதுசுகாதாரஊழியர்களுக்குதேவையான அனைத்து வசதிகளையும் இலவசமாக பெற்று கொடுப்பதாக அந்த ஆளும்தரப்பு எமக்கு உறுதியளித்துள்ளது. மேலும் எமது சுகாதார ஊழியர்களுக்கு நல்ல சம்பளம் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## நாடாளுமன்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களுக்கான உணவு விலையை அடுத்த மாதம் முதல் மறுசீரமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. நிர்வாக மட்ட அதிகாரிக்கு உணவுக்காக மாதத்திற்கு 4,000 ரூபா மற்றும் நிர்வாகமற்ற ஊழியருக்கு மாதம் 2,500 ரூபா என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## அமைப்பாளர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போயிருக்கிறது. தேர்தல் ஒன்று முடிவடைந்த பின்னர் நியமனப் பட்டியல் உறுப்பினர்களை தெரிவு செய்யும்போது இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவது சாதாரணமானதாகும்.

அதனால் பதவி விலக தீர்மானித்திருக்கும் தொகுதி அமைப்பாளர்கள் இந்த நேரத்தில் சற்று பொறுமையாக இருக்கவேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்து. அவர்கள் இந்தக் கட்சிக்காக ஆரம்ப காலத்தில் இருந்து பாடுபட்டவர்கள். தேர்தல் சட்டத்தில் இருக்கும் பிழையான நடவடிக்கையே இதற்குக் காரணமாகும். அதனால் இது கட்சியின் தவறு அல்ல. தொகுதி அமைப்பாளர்களின் மன ஆதங்கமும் நியாயமானதாகும். எனவே தொகுதி அமைப்பாளர்களின் பதவி விலகல், அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட கோபத்தில் எடுத்த தீர்மானமாகும். அது ஒருசில நாட்களில் சரியாகும். அதனால் அதுதொடர்பில்

## சபைகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தமானி வெளியிடப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இதுவரை சமர்ப்பிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் இந்த வர்த்தமானியில் உள்ளடக்கப்படும் என அவர் கூறினார்.

பெண்உறுப்பினர்கள்உள்ளிட்டஅனைத்து உறுப்பினர்களினதும் பெயர் பட்டியல் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்தார்.

பெயர்ப்பட்டியல் கிடைத்த பின்னர் மற்றுமொரு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பெயர்களை வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டார்.

## கணக்காய்வாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்ந்த கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிக்க ஜனாதிபதி முயற்சிப்பதன் பின்னணி என்ன என்ற சந்தேகம் எழுகிறது.

அரச நிதிதொடர்பான அனைத்து கணக்கு நடவடிக்கைகளையும் கணக்காய்வு செய்யும் பொறுப்புஅரச கணக்காய்வாளர்நாயகத்துக்கே இருக்கிறது. அதனால் இந்தப் பதவிக்கு கட்சிக்கு ஆதரவான யாரும் நியமிக்கப்படுவதில்லை. என்றாலும் கடந்த காலங்களில் 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்கள். ஆனால் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை, அதேபோன்று ஜனாதிபதி செயலகத்தினால் ஏலத்தில் விடப்பட்ட வாகனங்களின் மதிப்பீடு தொடர்பில் மக்கள் மத்தியில் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. இவை கணக்காய்வுக்கு உட்படுத்தப்படவேண்டிய விடயங்களாகும்.

அதேபோன்று மின்சாரக் கட்டணம் ஆசியாவிலே எமது நாட்டில்தான் அதிகம். அப்படி இருந்தும் மின்சார சபை எவ்வாறு 18 மில்லியன் நட்டமடைந்தது? இந்த விடயங்கள் கணக்காய்வுக்கு உட்பட்டால் இவற்றின் உண்மைத்தன்மை வெளிவரும். இவற்றை தடுப்பதற்கா ஆளும்தரப்பு முயற்சிக்கிறது என்ற சந்தேகம் எழுகிறது. தனக்கு நெருக்கமானவர்கள் யாரையும் அரச உயர் பதவிகளுக்கு நியமிப்பதில்லை எனத் தெரிவித்து ஆட்சிக்கு வந்த ஒருதரப்பு, மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாற்றமாக செயற்பட்டு வருகிறது. ஆளும்தரப்பின் பல உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆளும்தரப்புக்கு நெருக்கமானவர்களாகும்.

அதேவேளை சர்வதேசநாணயநிதியத்தின் தாளத்துக்கு ஆடப்போவதில்லை எனதெரிவித்து ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு தற்போது நாணய நிதியத்தின் இணக்கப்பட்டுக்கு அமைய மின்சார கட்டணத்தை நூற்றுக்கு 18 வீதத்தால் அதிகரிக்கத் தீர்மானித்திருக்கிறது. இடம்பெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் ஆளும்தரப்புக்கு பாடம் ஒன்றை கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். ஆளும்தரப்பின் வாக்குகள் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. அப்படி இருந்தும் ஆளும்தரப்பு மக்கள் தொடர்பில் சிந்திக்காமல் மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆளும்தரப்பிடம் செயற்திறமை இன்மை, பிரச்சினைகளை இனம்கண்டு அதற்கு முன்கூட்டியே தீர்வுகாண முடியாமல் இருப்பது தொடர்பில் மக்கள் உணர்ந்தே தேர்தலில் ஆளும்தரப்புக்கு செய்தி ஒன்றை வழங்கி இருந்தனர். எனவே ஆளும்தரப்பின் இயலாமையை மறைப்பதற்கும் ஒருசில விடயங்களைகணக்காய்வுக்குஉட்படுத்தாமல் மறைப்பதற்குமா ஆளும்தரப்பு இவ்வாறு செயற்படுகிறது என கேட்கிறோம்.

## எல்லாச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் இலங்கை வரலாற்றில் அதிக மன்றங்களைக் கைப்பற்றிய அரசியல் இயக்கமாக நாம் உள்ளோம். 3,926 உறுப்பினர்களை உருவாக்கியுள்ளோம். 152 உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்கள் தொடர்பான வர்த்தமானியை வெளியிட்டு ஆட்சி அமைக்கக்கூடிய இயலுமை எமக்கு உள்ளது.

மேலும் நாம் பல வெற்றிகளை பெற்றுக் கொண்டுள்ளோம். நாமே தனியாக அதிக உறுப்பினர்களைக் கொண்ட அணியாக உள்ளோம். சிதைவுகளைகொண்டுள்ளவர்கள் ஒன்றிணைந்தால் சில இடங்களில் பின் தள்ளப்படுவோம். ஆனால் அந்த 115 உள்ளூராட்சி மன்றங்களிலும் நாமே ஆட்சி அமைப்போம். அதுவே ஜனநாயகமாகும்.

மக்கள்தமதுவிருப்பத்தைஇந்தப்பிரேதசபை தேர்தலில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறானவர்கள் சபைகளில் ஆட்சி அமைப்பார்கள். எந்தவொரு இடத்திலும் சிதைவுகளை உடையவர்கள் ஆட்சி அமைப்பதற்கான அதிகாரத்தை மக்கள் வழங்கவில்லை. எனவே மக்களாணை எம்மிடமே உள்ளது. ஏனைய 115 உள்ளூராட்சி மன்றங்களிலும் அதிகாரத்தை அமைத்ததன் பின்னர் அதுவே மக்கள் ஆணைக்கு செய்யும் கௌவரமாக இருக்கும். ஆனால் வேறு விடயங்களை செய்து வந்தால் மற்றைய உள்ளூராட்சிமன்றங்களிலுமஆட்சிஅமைக்க நாம்முயற்சிகளைமேற்கொள்வோம். அதனை நன்றாக நினைவில் வைத்திருங்கள்.

எப்போதும் சரியான இடத்தில் நிற்கவேண்டும் அதிலிருந்து எமது பணியை ஆரம்பிக்கவேண்டும். இந்த நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்லக்கூடிய ஆளும்தரப்புதேசிய மக்கள்சக்தி ஆளும்தரப்பு மாத்திரமே. தரமான விடயங்களை பிரதேசங்களில் அறிமுகப்படுத்துங்கள். புதிய தரமான விடயங்களை அரசியலில் அறிமுகப்படுத்துங்கள். அந்த முறைமை ஊடாகப் பழையவர்கள் தோல்வியடைந்து விடுவார்கள். ஒருபோதும் புதிய தரமான விடயங்கள் இல்லாமல் அரசியலுக்கு வரமுடியாது. அந்த இடத்திலேயே எமக்கான அரசியல் உள்ளது.

புதியதரமானவிடயங்களுடன்பெறுமதியான சமுகத்தை உருவாக்கவேண்டும். அந்தப் பெறுமதியை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய இயலுமை எமக்கு மாத்திரமே உள்ளது என்பதை உறுதிப்படுத்தவேண்டும். இந்த 3926 உறுப்பினர்களுக்குள்ளேயே நாளை நாட்டைப் பொறுப்பேற்கக்கூடிய தலைவர்கள் உருவாக வேண்டும் என்றார்.

# ஐக்கியமாக வாழும் சமூகம் மத்தியில் இனவாதங்களை உருவாக்கும் இனவாதிகளைச் சட்டத்தின் முன்நிறுத்துக

## உதுமாலெப்பை எம்.பி. கோரிக்கை

(அஷ்ரப்கான்)

ஐக்கியமாக வாழும் சமூகங்கள் மத்தியில் இனவாதங்களை உருவாக்கும் இனவாதிகள் யாராக இருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நீதி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவை(திருத்தம்) சட்டமூல குழு விவாதம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக்குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தனது உரையில் -

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சானது மிகமுக்கியமான அமைச்சாகும். நமது நாட்டில் நீதியை நிலைநாட்டுவதற்கும் தேசிய ஒருங்கிணைப்புக்கும் சிறந்த முறையில் இயங்கி நமது நாட்டில் வாழும் சகல இன மக்களும் ஒற்றுமையாகவும் உரிமையுடனும் வாழக்கூடிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். ஆளும் கட்சியினர் நமது நாட்டு மக்களுக்கு வழங்கிய மிக முக்கியமான வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய பாரிய பொறுப்பு நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சுக்கு உள்ளது என்பதனை மறந்து விடக்கூடாது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக பயங்கரவாதச் சட்டத்தினை நீக்குவோம் என வாக்குறுதி அளித்துவிட்டு இதுவரையும் அது தொடர்பான எதுவித செயற்பாடுகளை முன்னெடுக்காமல் மாறாக பயங்கரவாத தடைச் சட்டத்தினை பாவித்து அப்பாவி மக்களை கைது செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதானது இவ்வாட்சியின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கையினை பலவீனப்படுத்தும் செயற்பாடாகும். எனவே, பயங்கரவாதச் சட்டத்தினை முற்றாக நீக்குவதற்கான ஏற்பாடுகளை நீதி அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

நமது நாட்டில் புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என்று வாக்குறுதி வழங்கினீர்கள். ஆனால் இதுவரையும் இவ்வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் உள்ளது. எனவே, புதிய அரசமைப்;பை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களால் உருவாக்கப்பட்ட 'அழகான தீவு புன்னகைக்கும் மக்கள்' எனும் தொலைநோக்குடன் உருவாக்கப்பட்ட செயற்றிட்டம் எனக் கூறுகின்றீர்கள். இத்திட்டத்தில் 18 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்ட போதும் இலங்கையில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதிகளை இதுவரையும் உறுப்பினர்களாக நியமிக்காமல் தமிழ் , முஸ்லிம் சமூகங்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளாத நிலையில் எவ்வாறு புன்னகைக்க கூடிய மக்களை உருவாக்க முடியும்? என வினா எழுப்பினார்.



நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் ஆஹி;லாசனைக் கூட்டத்தில் க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் விவரங்களை நான் நீதி அமைச்சரிடம் கேட்ட போது - இது தொடர்பான விளக்கங்களை பிரதி அமைச்சர் கூறுவார் என பதிலளித்தார். 'க்ளீன் ஸ்ரீலங்கா திட்டம்' பற்றி பிரதி அமைச்சர் கூறுகின்ற போது 'க்ளீன் ஸ்ரீலங்கா திட்டம் எங்களின் அமைச்சின் திட்டம் கிடையாது எனவும் க்ளீன் ஸ்ரீலங்கா திட்டம் ஜனாதிபதியினால் , ஜனாதிபதி செயலகத்தால் செயற்படுத்தப்படும் ஒரு திட்டம் எனவும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சிற்கும் எதுவித தொடர்பும் கிடையாது எனத் தெரிவித்தார்.

நமது நாட்டில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு ஜனாதிபதி உட்பட யாராக இருந்தாலும் நமது தேசிய ஒற்றுமைக்கு சமத்துவமில்லாத செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற போது அதனை சமத்துவப்படுத்துகின்ற செயற்பாடுகளை இவ்வமைச்சு முன்னெடுக்க வேண்டும்.

எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஊப் ஹக்கீம் அவர்கள் 'உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளதால் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றினை நியமித்து இது தொடர்பான இறுதி தீர்மானத்திற்கு வருவது நல்லது என நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்திருந்தார்.

ஆனால் அன்று ஆளுங்கட்சியினர் 'இல்லை, அப்படி ஒன்றும் தேவையில்லை நாங்கள் தேர்தல் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்வோம்' எனத் தெரிவித்தனர்.

அன்று நாங்கள் தெரிவித்த கருத்திற்கு ஆளும் கட்சியினர் செவி சாய்க்கவில்லை. ஆனால் இன்று உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் கிடைக்கப்பெற்றதும் தேசிய மக்கள் சக்தி அத்தேர்தல் முறையின் விளைவுகளை எதிர்நோக்கி வருகின்றது. ஜனநாயக முறையில் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் கருத்துக்களை மதியாத செயற்பாடுகளுக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளும் ஆட்சியமைக்க முடியாத தடுமாற்றமும் எல்லோருக்கும் ஒரு சிறந்த பாடமாக அமைந்துள்ளது என்ற யதார்த்தத்தினை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவினை நியமித்து உள்ளூராட்சி தேர்தல் முறையில் காணப்படும் குறைபாடுகளை ஆலோசனை செய்வதற்கு இடமளிக்காத ஆளும் கட்சியினர் இன்று உள்ளூராட்சி தேர்தல் முடிந்த பின்னர், நிறைவேற்று அதிகாரத்தையும் 159 நாடாளுமன்ற பெரும்பான்மையையும் பயன்படுத்தி உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கின்ற கருத்துக்கள் ஜனநாயகத்திற்கும் தேர்தல் சட்டத்திற்கும் பெரும் சவாலான விடயமாகும்.

நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல மாவட்டங்களை வெற்றி கொண்டன. ஆனால் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அம்மக்கள் வழங்கிய ஆதரவில் வீழ்ச்சியடைந்துள்ளன.

நடைமுறையில் உள்ள உள்ளூராட்சி தேர்தல் முறையானது தேர்தலில் வட்டாரங்களையும், பெரும்பாண்மை வாக்குகளைப் பெற்ற கட்சியும் தோல்வியடையும் நிலையும், வட்டாரங்களில் தோல்வி அடைந்த கட்சியானது வெற்றியடையும் நிலையையும் தோற்றுவித்துள்ளது.

அதுமட்டுமன்றி உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற ஓர் உறுப்பினருக்கு 25 இலட்சம் பணத்தினை வழங்கி ஆதரவு கேட்கும் அரசியல் கலாசாரத்தையும் இத்தேர்தல் முறை ஏற்படுத்தியுள்ளது என தனது உரையில் தெரிவித்தார்.

## ரயில் – மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி இரணைமடு சந்திக்கு அண்மித்த அறிவியல் நகர் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்திருந்த ஒருவர், ரயில் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்து, நேற்று (ஞாயிற்றுக் கிழமை) இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளர் அசோக சேபால பதவி விலகினார்

(கேதீஸ்)

தலவாக்கலை, லிந்துலை நகர சபையின் முன்னாள் தலைவர் அசோக சேபால ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளர்பதவியிலிருந்து விலகியுள்ளார்.



எனினும், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தான் விலகவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக தனது அரசியல்பயணம்தொடரும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிதலைவர்சஜித் பிரேமதாஸதலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்ளக மோதல் ஏற்பட்டுள்ள நிலையில், அக்கட்சியின் நான்கு உறுப்பினர்கள் தொகுதி அமைப்பாளர் பதவியை ஏற்கனவே இராஜினாமா செய்துள்ளனர்.

இதனையடுத்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பட்டியல் ஊடாக கிடைக்கப்பெற்ற ஆசனங்களுக்குரிய உறுப்பினர் தெரிவை மையப்படுத்தியே இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் உள்ளூராட்சி சபை ஆசன பங்கீடு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினையே தான் பதவி விலக காரணம் என அசோக சேபால தெரிவித்துள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உலகத்திற்கான அடுத்த பெருந்தொற்று அபாயம்

மனித குலம் பல நூற்றாண்டுகளாகவே நோய்களுடன் போராடி வருகின்றது. நவீன மருத்துவம் பல உயிர்களைக் காக்கும் சூழலை உருவாக்கி இருக்கும்போதிலும், தற்போது நம்மை ஆபத்துக்கு உள்ளாக்கும் ஒரு அமைதியான எதிரி வளர்ந்து கொண்டிருக்கிறது – அது தான் ஆன்டிமைக்ரோபியல் எதிர்ப்பு -Antimicrobial Resistance – AMR).

இந்தப் பொருள், கிருமிநாசினிகள் (antibiotics, antivirals, antifungals, antiparasitics) நோய்களை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பலவீனப்படுவதைக் குறிக்கிறது. பாக்டீரியா, வைரஸ், பூஞ்சைகள்போன்ற உயிரிகள், தங்களுக்கெதிரான மருந்துகளுக்கு எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொள்வதால், வழக்கமான சிகிச்சைகள் பலனளிக்காமல், சாதாரணமான தொற்றுகளும் உயிர்க்க் கேடாக மாறிவிடுகின்றன.

உலக சுகாதார அமைப்பின் (WHO) கணிப்புப்படி, ஆண்டுக்கு சுமார் 1.3 மில்லியன் உயிர்கள் புனியூ காரணமாக இழக்கப்படுகின்றன. 2050க்குள் இது வாரத்துக்கு 1 கோடி பேர் வரை உயிரிழக்கக்கூடிய அபாயமாக உயரலாம் என்பதே அறிக்கைச்-சிந்தனை. இதற்கான முக்கியக் காரணிகள் – மருந்துகளின் அளவிற்கு மீறிய, தவறான அல்லது தேவையற்ற பயன்பாடு, உணவு உற்பத்தியில் அத்தியந்தமாக பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள், சுத்தமற்ற மருத்துவ நடைமுறைகள் மற்றும் சரியான விழிப்புணர்வின்மை ஆகியவையாகும்.

இந்த நெருக்கடியை சமாளிக்க, உலக நாடுகள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டியது அவசியமாகின்றது. முதன்மையாக, மருத்தவ சிகிச்சை வழங்கும் அனைவரும் ‘ மருத்தவர்கள், மருந்தாளர்கள், வணிக நிறுவனங்கள்’ சிக்கனமான முறையில் கிருமிநாசினிகளை பயன்படுத்தும் ஒழுங்கை பின்பற்ற வேண்டும். இரண்டாவது, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கல்விபிரச்சாரங்கள் தேவை. மூன்றாவது, புதிய வகை மருந்துகளை உருவாக்கும் ஆராய்ச்சி, அதன் மீது அரசு முதலீடு செய்வதும், தனியார் பங்குதாரர்களை ஊக்குவிப்பதும் அவசியமாகிறது.

இன்று நாம் எதிர்கொள்கின்றது நோய்த்தொற்றுகளின் அடுத்த அத்தியாயம் அல்ல – அது மருந்துகள் செயலிழக்கக் கூடிய, முற்றிலும் சிகிச்சையில்லா உலகம் என்பதையே குறிக்கிறது. இதனை தவிர்க்க, தற்போது நடவடிக்கை எடுக்காமையால், நாளை நம்மை மீட்டெடுக்க இயலாத ஒரு சுழற்சியில் இழுத்துச் செல்லும் என்பதற்குத் துணிவான அரசியல் தீர்மானங்கள், அறிவியல் ஆதரவு மற்றும் மக்கள் ஒத்துழைப்பு இன்றியமையாதவையாகின்றன.

இன்று விழித்துக்கொள்வது நாளைய உயிர்களை காக்கும் வழி.



# காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்கத் தலையீடு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஜம்மு காஷ்மீர் நீண்ட கால பிரச்சினையில் அமெரிக்க தலையீடு என்பதனை இந்திய அரசு மட்டுமன்றி ஆசியாவில் எவருமே நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். தற்போது இந்திய இறையாண்மைக்கு எதிராக அமெரிக்கா செயல்படுமா அல்லது பாகிஸ்தானுடன் முரண்படுமா என்பதை எதிர்வரும் காலங்களில் அறிந்து கொள்ளலாம்.

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண சர்வதேச மத்தியஸ்தத்தை மறுக்கும் பல தசாப்த கால கொள்கையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கம் இதுவரை உறுதியாக இருந்து உள்ளது.

ஆனால் அதன் கொள்கைப் பிடியிலிருந்து இந்திய அரசு மாற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் நீண்ட கால பிரச்சினையில் அமெரிக்க தலையீடு என்பதனை இந்திய அரசு மட்டுமன்றி ஆசியாவில் எவருமே நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். 2019 ஆம் ஆண்டில், மோடியின் அரசாங்கம் இந்திய நிர்வாக காஷ்மீரின் அரை சுயாட்சியை நீக்கி, காஷ்மீரிகளை மேலும் அந்நியப்படுத்தியதன் விளைவாக, அவர்களின் அரசியல் உரிமைகளுக்காக சர்வதேச அளவில் குரல் கொடுக்க யாரும் இருக்கவில்லை.

தற்போது இந்திய இறையாண்மைக்கு எதிராக அமெரிக்கா செயல்படுமா அல்லது பாகிஸ்தானுடன் முரண்படுமா என்பதை எதிர்வரும் காலங்களில் அறிந்து கொள்ளலாம்.

### காஷ்மீர் பிரச்சினையில் டிரம்ப்:

போர் நிறுத்த உடன்படிக்கையை வரவேற்ற பாகிஸ்தான், தெற்காசியாவிலும் அதற்கு அப்பாலும் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு தாக்கங்களை ஏற்படுத்தும் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க டிரம்பின் விருப்பத்தைப் பாராட்டுவதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் விவகாரம் என்பது இந்தியா- பாகிஸ்தான் பிரிவினை காலத்தில் இருந்தே இருந்து வருகிறது. ஆனால் இதுவரை ஜம்மு காஷ்மீர் பிரச்சனையில் மூன்றாவது நாட்டின் தலையீட்டை இந்தியா ஒருபோதும் அனுமதித்தது இல்லை.

ஆனால் ஜம்மு காஷ்மீர் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் இந்தியா- பாகிஸ்தான் இடையேயான பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா தயாராக உள்ளதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

முதற்கட்டமாக இந்தியா - பாகிஸ்தான் இடையே அமெரிக்கா நடத்திய சமரச பேச்சுவார்த்தையை அடுத்து, கடந்த ஏழாம் திகதி முதல் நடந்து வந்த மோதல் நான்கு நாட்களில் முடிவுக்கு வந்துள்ளது.

எதிர்காலத்தில் இந்தியா- பாகிஸ்தான் இடையேயான மோதலைத் தடுக்கும் வகையில் அமெரிக்கா தலையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியாவும் பாகிஸ்தானும் போர் நிறுத்தத்தை கடைபிடிக்க ஒப்புக் கொண்டதாக அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் டிரம்ப் அஅறிவித்துள்ளமை பற்றி பல்வேறு விமர்சனங்களும் எழுந்துள்ளன.

குறிப்பாக இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் வர்த்தக ரீதியில் இரு நாட்டையும் சமரசம் செய்து கொள்ளும் வகையில் டிரம்ப் ஏற்படுத்தி கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

ஆனாலும் அமெரிக்காவின் தலையீட்டால் நடந்த நீண்ட பேச்சுவார்த்தையின் பலனாக இந்தியா - பாகிஸ்தான் மோதலை முழுமையாக, உடனடியாக நிறுத்திக்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளன. இரு நாடுகளும் புத்திசாலித்தனமான முடிவை எட்டியதற்கு வாழ்த்துகள் என்றும், இந்த விவகாரத்தில் இரு நாட்டு மக்களிற்காக கவனம் செலுத்தியமைக்கு நன்றி என்றும் அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

### இந்தியா விவகாரங்களில் அமெரிக்க தலையிடு:

அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் அறிவிப்புக்குப் பின்னரே இந்திய அரசும், பாகிஸ்தான் மீதான அனைத்து தாக்குதலையும் நிறுத்துவதாக அறிவித்தது. இந்தியா- பாகிஸ்தான் இடையேயான மோதல் முடிவுக்கு வந்த போதும், இந்தியாவின் விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டிருப்பது பெரும் சர்ச்சையாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்காவின் இத்தலையீடு குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர்கள் தொடர்ச்சியாக கேள்வி எழுப்பி வருகின்றனர். ஆனால் இந்தியா- பாகிஸ்தான் நாடுகளின் தலைமைத்துவம் குறித்து பெருமிதம் அடைகிறேன். வரலாற்று சிறப்பு வாய்ந்த



போர் நிறுத்த முடிவுக்கு அமெரிக்கா

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# காஷ்மீர் விவகாரத்தில்

4ம் பக்கத் தொடர்ச்சி...........

உதவி செய்ததில் எங்களுக்கும் பெருமை என குறிப்பிட்டுள்ள டொனால்ட் டிரம்ப், ஜம்மு காஷ்மீர் விவகாரத்தில் தீர்வை ஏற்படுத்த இந்தியா-பாகிஸ்தானுடன் இணைந்து பணியாற்ற தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியென இந்திய அரசு தெரிவித்துள்ளது. மூன்றாவது நாடு ஒன்றின் எந்தவித தலையீட்டுக்கும் ஒருபோதும் அனுமதியே கிடையாது என்கின்ற இந்தியாவின் நீண்டகால நிலைப்பாட்டை டொனால்ட் டிரம்ப்பின் இந்த நடவடிக்கை கேள்விக்குறி ஆகியுள்ளது என்கின்றனர் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்கள்.

ஜம்மு காஷ்மீர் பிரச்சனையில் அமெரிக்கா நேரடியாக தலையிட விரும்புகிறது என்பதையே டொனால்ட் டிரம்ப் வெளிப்படுத்தி இருக்கிறார். இதனால் தான் இந்திய நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வை உடனே கூட்டி விவாதிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் வலியுறுத்துகின்றனர்.

## போர் நிறுத்த ஒப்புதல்:

கடந்த ஏப்ரல் 22ம் திகதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் தாக்குதலில் 26 அப்பாவி சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடி கொடுக்கும் நோக்கில், இந்திய ராணுவம் மே ஏழாம் திகதி தனது ராணுவ நடவடிக்கையை தொடங்கியது.

பாகிஸ்தானில் செயல்பட்ட ஒன்பது தீவிரவாத முகாம்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இதைத் தொடர்ந்து நான்கு நாட்களாக இந்தியா - பாகிஸ்தான் இடையே ராணுவ மோதல் கடுமையாக நிகழ்ந்தது. இதில், இரு தரப்பிலும் பல்வேறு ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தளங்கள் அழிக்கப்பட்டன.

ராணுவ நடவடிக்கைகளை நிறுத்த ஒப்புதல் அளித்த இந்நிலையில், இந்தியாவும், பாகிஸ்தானும் அனைத்துவகையானராணுவநடவடிக்கைகளையும் சனிக்கிழமை மே 10 மாலை 5 மணி முதல் நிறுத்திக் கொள்ள ஒப்புக்கொண்டன.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், அணு ஆயுதம் ஏந்திய இரண்டு போட்டி நாடுளிடையே போர் நிறுத்தத்திற்கு தனது நிர்வாகம் முன்வந்த சில நாட்களுக்குப் பிறகு, நீண்டகாலமாக சர்ச்சைக்குரிய காஷ்மீர் பிராந்தியத்திற்கு ஒரு 'தீர்வை' அடைய இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் இணைந்து பணியாற்ற முன்வந்தார் என்று தெரிவித்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, காஷ்மீர் தொடர்பாக ஒரு தீர்வை எட்ட முடியுமா என்பதைப் பார்க்க, இரு நாட்டுடன் இணைந்து பணியாற்றுவேன் என்று டிரம்ப் தனது சமூக வலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## அணு ஆயுதம் ஏந்திய அயல்நாடுகள்:

1947 இல் பிரிட்டிஷ் இந்தியாவை இந்தியா மற்றும் பாகிஸ்தானாகப் பிரித்ததிலிருந்து முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசம் சர்ச்சைக்குரியதாக உள்ளது. இரு நாடுகளும் இப்பகுதியில் மூன்று போர்களை நடத்தியுள்ளன. அவை காஷ்மீர் முழுவதையும் உரிமை கோருகின்றன. ஆனால் அதன் சில பகுதிகளை சீனாவும் கட்டுப்படுத்துகின்றது.

இந்தியாநிர்வகிக்கும்காஷ்மீர்சுதந்திரத்திற்காகவோ அல்லது பாகிஸ்தானுடன் இணைவதற்காகவோ பல தசாப்தங்களாக ஆயுதக் கிளர்ச்சியைக் கண்டுள்ளது. புது டில்லி காஷ்மீர் கிளர்ச்சியை அடக்க 700,000 க்கும் மேற்பட்ட வீரர்களை அங்கே அனுப்பியுள்ளது.

ஜம்மு காஷ்மீர் பிரச்சினைக்கான எந்தவொரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வும் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களின்படி இருக்க வேண்டும் என்றும், காஷ்மீர் மக்களின் அடிப்படை உரிமைகளை




உணர்ந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும்



என்றும் பாகிஸ்தான் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. அவர்களின் சுயநிர்ணய உரிமை உட்பட என்று பாகிஸ்தான் வெளிப்படையாக அறிவித்துள்ளது.

## காஷ்மீரின் தொடர் பிணக்கு :

வரலாற்று ரீதியில் இந்தியா சுதந்திரம் அடைந்ததும் இந்திய நிலப்பரப்பில் அடங்கி இருந்த சமஸ்தனங்கள் இந்தியாவோடும், பாகிஸ்தான் நிலப்பரப்பில் அமைந்த சமஸ்தானங்கள் பாகிஸ்தானோடும் இணைந்தன.

புவியியல் ரீதியாக இரண்டில் இருந்தும் ஒதுங்கி இருந்த காஷ்மீர் தனி நாடாகவே நீண்ட காலமாக இருந்து விட்டது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர் முஸ்லீம்களாகவும் மன்னர் இந்துவாகவும் இருந்தும் கூட எந்தப் பிணக்கும் அங்கு பாரிய அளவில் அக்காலத்தில் ஏற்படவில்லை.

பாகிஸ்தான் பேராசைப்பட்டது போல காஷ்மீர மக்கள் முஸ்லீம்கள் என்பதால் தாங்கள் படையெடுத்துச் சென்றால் நம்மை ஆதரிப்பார்கள் என்று தப்பு கணக்கு போட்டு பாகிஸ்தான் உள்ளே நுழைய நாட்டைக் காக்க மன்னர் ராம்சிங் இந்திய ராணுவத்தின் உதவியை நாடினார்.

1947 பிரிவினையின் போது பாகிஸ்தான் ஆக்கிரமித்த பகுதியை பாகிஸ்தான் எடுத்துக் கொள்ள , இந்தியப் படைகள் நுழைந்த பிறகு மிஞ்சிய பகுதிகளை இந்தியா இணைத்துக் கொண்டது. அன்று பிடித்தது அந்த நிலப்பரப்பிற்கும் காஷ்மீர் மக்களுக்கும் தீராத வலி தொடங்கியது.

1940களின் இறுதியில் காஷ்மீரை இந்தியாவோடு இணைத்த போது நேரு அப்போது சில உரிமைகளை அரசியல் சாசனப் பிரிவிலேயே எழுதிக் குடுத்தார். ஆனால் அவைகள் தற்போதய மோடியின் ஆட்சியில் நீக்கப்பட்டு இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# சீ – தமிழ் ஸரிகமபா சீசன் 5 இற்கு அம்பாறைப் பாடகர் சபேசன் தெரிவு

(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் விநாயகபுரத்தை சேர்ந்த இளம் பாடகர் சுகிர்தராஜா சபேசன் இந்திய மண்ணில் சீ - தமிழ் தொலைக்காட்சில் இடம்பெறும் சரிகமபா சீஸன் 5 இற்கான பாடல் நிகழ்ச்சியில் தேர்வாகி சுற்றுக்கு தெரிவாகி சாதனை படைத்துள்ளார்.

வரலாற்றில் அம்பாறை மாவட்டத்திலிருந்து சீதமிழ் ஸரிகமபா நிகழ்வில் பாடுவதற்கு தெரிவான முதல் பாடகர் சபேசன் என்பது பெருமைக்குரியது.

தெரிவானபோது மேடையில் உணர்ச்சிவசப்பட்டு அழுதழுது தனது விளக்கத்தை நடுவர்களிடம் வழங்கினார்.

தான் அதிஸ்டமில்லாதவன். பட்டதாரியான பின்னரும் கடந்த ஐந்து வருடங்களாக தொழிலின்றி குடும்பத்தை வழிநடத்த சிரமப்பட்டுக் கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

இங்கு இப்படி முதல் சுற்றில் ஜெயித்தது வாழ்க்கையில் மறக்க முடியாது. மிகவும் மகிழ்ச்சி. அம்மாவுக்கும் அனைவருக்கும் நன்றிகளைக் கூறினார்.

அவரது தெரிவுக்கு சரமாரியாக சமூக வலைத்தளங்களில் பாராட்டுகள் வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.



அவர் பிறந்த அம்பாறை மாவட்டம் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் தவிசாளர் முதல் பலரும் மனப் பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

அவர் எமது நாட்டுக்கும் எமது அம்பாறை மாவட்டத்திற்கும் எமது பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்து வெற்றி நாயகனாக மகுடம் சூட எனது இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள் என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் ஆசிவழங்கியுள்ளார்.

இதேவேளை அவர் பிறந்த வினாயகபுரத்தில் பிறந்து இம்முறை திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளராக வரவிருக்கும் பிரபல தொழிலதிபர் சுந்தரலிங்கம் சசிகுமார் வாழ்த்துத் தெரிவிக்கையில் - சீ தமிழ் சரிகமபாவில் தம்பி சபேஷனின் வெற்றி எமது மண்ணுக்கு கிடைத்த பெருமை. வாழ்த்துக்கள் சபேஷன் என்றும் எனது உதவிகள் உங்களுக்கு கிடைக்கும் என்பதை மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். - என்றார்.

சபேசன்பாடசாலை மற்றும் கிராமத்து கலை நிகழ்வுகளில் தன்னுடைய வசீகரமான குரல் வளத்தால் பல பாடல்களைப் பாடி கிராமத்தவர்களின் பாராட்டைப் பெற்றவர்.

சக்தி டிவி 2014 ஆம் ஆண்டு நடத்திய சக்தி சூப்பர் ஸ்டார் நிகழ்ச்சியில் மகுடத்தினைப் பெற்றார்.

இதன்பின் இலங்கை முழுவதும் இடம்பெறுகின்ற இசை நிகழ்ச்சிகளில் இவருடைய குரல் ஒலிக்கத் தொடங்கியது.

தன்னுடைய இசை வாழ்வில் உச்சம் காண நினைக்கும் இந்த இசைப்பிரியனுக்கு இந்திய மண்ணில்தடம்பதிக்கின்றவாய்ப்புகிடைத்திருக்கிறது.

தனக்கு கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் சரியாக பயன்படுத்துகின்ற சபேஷன், சீ தமிழ் சரிகமப மேடையிலும் சாதனை படைப்பான் என்ற பெரும் நம்பிக்கையோடு கிராமமும் ஒட்டு மொத்த சொந்தங்களும் காத்திருக்கின்றோம் என்று அமைப்புக்கள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளன.

## மாலினி பொன்சேகா மறைவு

இலங்கைசினிமாவின் ராணி' என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற நடிகை மாலினி பொன்சேகா நேற்று காலை காலமானார். கொழும்பில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் காலமானார்.

மறைந்த நடிகை மாலினி பொன்சேகாவின்இறுதிச்சடங்குநாளை திங்கட்கிழமை சுதந்திர சதுக்கத்தில் கலாசார விவகார அமைச்சின் அரச மரியாதையுடன் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு தசாப்தங்களாக இலங்கை திரைப்படத்துறையில் நடித்து வந்த மூத்த நடிகையான இவர்இ 1968 இல் திஸ்ஸ லியன்சூரியவின் 'புஞ்சி பபா' என்ற திரைப்படத்துடன் இலங்கைத்திரைப்படத்துறையில்தனதுவாழ்க்கையைத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து பல திரைப்படங்களில் நடித்து பல்வேறு விருதுகளை வென்று சாதனை படைத்துள்ளார்.

2010 ஆம் ஆண்டில்இ ஆசியாவின் 25 சிறந்த திரைப்பட நடிகர்களில் ஒருவராக சி.என்.என் ஊடகத்தால் பெயரிடப்பட்டார். 1978 ஆம் ஆண்டு பைலட் பிரேம்நாத் தமிழ்த் திரைப்படத்தில்சிவாஜி கணேசனுடன் இணைந்து கதாநாயகியாக நடித்தார். அத்துடன்யார்அவள்(1976)இமல்லிகை மோகினி (1979)இ பனி மலர் (1981) ஆகிய தமிழ்த் திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

மாலினி பொன்சேகா 2010 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டார்.

## விபத்தில் 23 பேர் காயம்

நுவரெலியா -கண்டி பிரதான வீதியின் டொப்பாஸ் பகுதியில் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 23 பேர் காயமடைந்துள்ளனர்.

குருநாகல் பகுதியிலிருந்து பதுளைக்கு சுற்றுலா சென்று வெள்ளிக்கிழமை இரவு திரும்பிக் கொண்டிருந்த பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது சம்பவத்தில் 20 பெண்களும் 3 ஆண்களும் காயமடைந்துள்ளதுடன் அவர்கள் நுவரெலியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா-கண்டி பிரதானவீதியின்டொப்பாஸ்பிரதேசத்தில் இந்த விபத்து சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு பதிவாகியுள்ளது.

நுவரெலியாவிலிருந்து கண்டி நோக்கி பயணித்துகொண்டிருந்த தனியாருக்கு சொந்தமான பஸ் ஒன்று வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி கவிழ்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பஸ் விபத்துக்குள்ளான சந்தர்ப்பத்தில் அதன் சாரதி மற்றும் நடத்துனர் உள்ளிட்ட 54 பேர் இருந்துள்ளதாகவும் அவர்களில் 23 பேர் காயமடைந்த நிலையில் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதில் 3 ஆண்களும்20பெண்களும்உள்ளடங்குவர்.

குருநாகல் பகுதியிலிருந்து பதுளைக்கு சுற்றுலா சென்று திரும்பிக்கொண்டிருந்த போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதுடன் குறித்த தரப்பினர் குருநாகல் கிரிவவுல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிதக்கின்றனர்.

விபத்தின்போது பாதுகாப்பாக மீட்கப்பட்டவர்கள் நுவரெலியா பொலிஸ்நிலையத்தில்தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு உலர் உணவும் பொலிஸாரால் வழங்கப்பட்டிருந்தது. விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாதநிலையில்நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### தங்க முலாம் துப்பாக்கி:

## கைதான முன்னாள் எம்பி துமிந்தவுக்கு விளக்கமறியல்



தங்க முலாம்பூசப்பட்ட ரி-56 துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அனுராதபுரம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க பயங்கர்வாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி விளக்கமரியலில் வைக்க கல்கிசை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தர்விட்டது. கல்கிசை பதில் நீதிவான் ஷாந்த குமார இதற்கான உத்தர்வை பிறப்பித்தார்.

தங்க முலாம் பூசப்பட்ட ரி- -56 துப்பாக்கிகண்டுபிடிக்கப்பட்டசம்பவம் தொடர்பில் முன்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரண்டு பெண்களையும் மற்றொரு நபரையும் ஜூன் 5 விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் துமிந்த திஸாநாயக்கவின் சட்டத்தரணிகள் அவர் சார்பில் பிணை கோரி சிறப்பு வாதங்களை கல்கிசை நீதிவான் முன்னிலையில் முன் வைக்க வேண்டும் என வைத்த கோரிக்கைக்கு அமைய இவ்வாறு அவரை மே 29வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

கொழும்பு, திம்பிரிகஸ்யாய பகுதியில் உள்ள சொகுசு தொடர்மாடி குடியிருப்பில் வைத்து வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட துமிந்த திஸாநாயக்கவை நேற்று மன்றில் முற்படுத்தி மேலதிக விசாரணை அறிக்கையை முன்வைத்த பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் அதிகாரிகள், அவரை 4ஆவது சந்தேகநபராக மன்றில் முற்படுத்துகின்றனர் என்று கூறினார். அத்துடன் 3 ஆவது சந்தேகநபர் ( சமயற்காரரான ஹேமந்த) ஊடாக துமிந்த திஸாநாயக்க ( 4 ஆம் சந்தேக நபர்) முதல் இரு சந்தேக நபர்களுக்கும் ( 68, 40 வயதுடைய பெண்கள்) இந்த தானியக்க துப்பாக்கியான ரி-56 ரக துப்பாக்கியை வழங்கியுள்ளமை தொடர்பில் விசாரணையில் தகவல்கள் வெளிப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் கூறினர்.

முன் வைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் ஆராய்ந்த கல்கிஸை பதில்நீதிவான்ஷாந்த குமாரஇ 4ஆவது பிரதிவதி குறித்து பிணை விண்ணப்பம் செய்ய இவவ்ழக்கை எதிர்வரும் மே 29 மீள விசாரணைக்கு அழைக்க உத்தரவிட்டதுடன், அதுவரை அவரை விளக்கமறியலில்வைக்கஉத்தரவிட்டார். சந்தேகநபருக்கு சுகயீனம் இருப்பதாக சட்ட வைத்திய அதிகாரி சான்றிதழ் அளித்துள்ள நிலையில் அவருக்கு சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை வழங்கவும் நீதிவான் ஆலோசனை வழங்கினார்.

இதணையடுத்துதுமிந்ததிஸாநாயக்க சிறைச்சாலை பஸ் வண்டியில் புதிய மெகசின் சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சாணக்கியனின் தனிநபர் சட்டமூலத்தை நிறைவேற்ற அரசு ஒத்துழைக்கவேண்டும்

## சுமந்திரன் வலியுறுத்து

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சுமட்டத்தில் முன்னெடுத்து வருவதாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்திருக்கும் நிலையில், மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கினால் கொண்டுவரப்படும் தனிநபர் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனால் தனிநபர் சட்டமூலமொன்றை சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டு வியாழக்கிழமை வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அமைச்சு மட்டத்தில் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், அதனை விரைவாக நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கும் என எதிர்பார்ப்பதாகவும் மாகாணசபைகள், உள்ளூராட்சிமன்றங்கள் மற்றும் பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட சுமந்திரன் -

மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் 2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தத்தை நீக்கி, மாகாணசபைத் தேர்தலை மீண்டும் பழைய முறைமையிலேயே நடத்துவதற்கு ஏதுவாக தான் 2019 ஆம் ஆண்டிலும், பின்னர் 2023 ஆம் ஆண்டிலும் கொண்டுவந்த சட்டமூலம் நிறைவேற்றப்படவில்லை எனவும், அச்சட்டமூலமே தற்போது சாணக்கியனால் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

2019 ஆம் ஆண்டில் அத்தனிநபர் சட்டமூலத்தை முன்வைத்து சில நாள்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாகவும், 2023 ஆம் ஆண்டில் அச்சட்டமூலத்தை மூன்றாம் வாசிப்புக்கு எடுக்கவேண்டியிருந்த நிலையில், அது நிகழ்ச்சிநிரலில் இருந்து நீக்கப்பட்டதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது அரசாங்கமும் மாகாணசபைத்தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சு மட்டத்தில் முன்னெடுத்துவருதாக அமைச்சர் சந்தன அபேரத்ன கூறியிருக்கும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கினால் கொண்டுவரப்படும் இத்தனிநபர் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மாகாணசபைத்தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும் எனவும், இனியும் காலதாமதம் செய்யப்படக்கூடாது எனவும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

# கிளிநொச்சி கணேசபுரத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு

கிளிநொச்சி கணேசபுரம் முனியப்பர் ஆலயத்திற்கு அருகில் உள்ள வாய்க்காலில் ஆணொருவரின் சடலம் மீட்பு சடலத்திற்கு அருகில் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் வாய்க்காலில் காணப்படுகிறது.





சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. கிளிநொச்சி ஜெயந்தி நகரைச்சேர்ந்த சோமு கஜேந்திரமூர்த்தி 37 வயதான 03 பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# திருகோணமலையில் எனது விவசாய காணியும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது

## விடுவிக்குமாறு கோருகிறார் குகதாசன் எம்.பி.

(ஹஸ்பர்)

அரசாங்கத்திற்கு இந்த நாட்டிற்கு ஒரு வருடத்திற்குஐந்து இலட்சம் மெற்றிக்தொன் அரிசி உற்பத்தி பாதிக்கப்படுகிறது. எனவே நாட்டினுடைய நன்மை கருதியும் விவசாயிகளின் நன்மை கருதியும் அரசாங்கம் காணிகளை விடுவிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இலங்கைதமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.



திருகோணமலையில் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) மாலை இடம் பெற்ற காணி அபகரிப்பு தொடர்பிலான இரு குறுந் திரைப்படங்கள் வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்டதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் கூறுகையில் -

இது தொடர்பாக கடந்த வெள்ளிக் கிழமை நாடாளுமன்றத்தில் பிரதமர் தலைமையில் கலந்துரையாடல் இடம் பெற்றிருந்தது நானும் கலந்து கொண்டேன். இதில் வட மாகாணத்தை மையப்படுத்தி கலந்துரையாடல் இடம் பெற்றாலும் கிழக்கு மாகாணத்தை பற்றி பேசப்படவில்லை. இருந்த போதிலும் திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் காணி பிரச்சினைகள் தொடர்பில் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளேன் என்றும் தானும் ஒரு விவசாயி என்ற அடிப்படையில் எனது வயல் நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன இதில் கூடிய கவனம் செலுத்தி மக்கள் காணி பிரச்சினைகளை தீர்க்க இயலுமான முயற்சிகளை மேற்கொள்வேன்.

316000 ஏக்கர் காணிகளை விடுவித்து விவசாயிகளின் துன்பத்தை துடைக்க வேண்டும் மேலும் ஐந்து இலட்ச மெற்றிக் தொன் நெல் உற்பத்தியை அதிகரிக்க முயற்சிக்க வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறேன். - என்றார்.

# திருமலை மாவட்ட அப்பாவி மக்களின் நில ஆக்கிரமிப்பு தொடர்பான இரண்டு குறுந் திரைப்படங்கள் வெளியீடு!

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் மக்கள் நில அபகரிப்புக்களை எடுத்து காட்டும் வாழ்வியலுடன் தொடர்புடைய 'சம்பூர் மின் உற்பத்தி நிலையம் முதல் சக்தியற்ற வாழ்க்கை' மற்றும் 'திரியாயின் ஆத்திக்காடு' என்ற இரு ஆவணத் திரைப்பட வெளியீடு திருகோணமலை ஜூப்லி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

குறித்த வெளியீடுகளை அகம் மனிதாபிமான வளநிலையம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் குறித்த பகுதியில் உள்ள மக்களின் முதன்மையான சிக்கல்கள் தொடர்பில் ஆவணப் படுத்தும் வகையில் குறித்த திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் , சமூக சிவில் செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.






# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வருகை

## ஒரு தொகுதி உபகரணமும் கையளிப்பு

(பாறுக் ஷிஹான்)

சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் ஊடாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சகல வசதிகளையும் கொண்ட கட்டடத்தொகுதி மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது.

குறித்த வைத்தியசாலைக்கு சனிக்கிழமை விஜயம் செய்த கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ள கட்டடத் தொகுதியையும் பார்வையிட்டார்.

இதேவேளை அக்கட்டடத்துக்குத் தேவையான ஒரு தொகுதி இலத்திரனியல் உபகரணங்களையும் வைத்திய அத்தியட்சகர் பீ.பிரபாசங்கரிடம் பிராந்திய பணிப்பாளர் கையளித்தார்.

இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர் உட்பட வைத்திய அதிகாரிகள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## பாணந்துறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்ததுப்பாக்கிச்சூட்டுசம்பவத்திற்காக மில்லிமீற்றர் 9 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

சம்பவம் நடந்த இடத்தில் சுமார் 10 வெற்றுத் துப்பாக்கி ரவைகள் கண்டெடுக்கப்பட்டன.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும்,இந்தத்தாக்குதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பெண் உட்பட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மே 17 நாரஹேன்பிட்டி சுற்றுவட்ட வீதியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு அருகில் துசித ஹல்லோலுவ பயணித்தஜீப்வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இதன்போது ஹல்லோலுவவும் அவரது சட்டத்தரணி தினேஷ் தொடங்கொடவும் வாகனத்தில் பயணித்திருந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள்ஜீப்வாகனத்தைவழிமறித்து, துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

காலைக்கதிர்
Kalaikkathir

# 'நெக்ஸ்ட்' நிறுவனத்தை மூட தொழிற்சங்கம் கடும் எதிர்ப்பு

## அதனை மீண்டும் திறக்க வலியுறுத்து

பிரித்தானியாவில்அதிகஇலாபமீட்டும் நிறுவனங்களில் நெக்ஸ்ட் நிறுவனம் நான்காவது இடத்திலுள்ளது. நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக எமக்கு ஒருபோதும் அறிவிக்கப்படவில்லை. இந்த நிறுவனத்துக்கு ஒரு பில்லியன் யூரோ இலாபம் காணப்படுகிறது. எனவே தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பித்து தொழிலாளர்களுக்கு தொழிலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சுதந்திர வர்த்தக வலய சேவையாளர் சங்கத்தின் இணை செயலாளர் அன்டன் மார்கஸ் தெரிவித்தார்.

பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜயசிங்கவுடன் தொழில் அமைச்சில் இடம்பெற்ற பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நெக்ஸ்ட்' தொழிற்சாலை மே 19 மாலை 5 மணியிலிருந்து மூடப்பட்டமை தொடர்பில் இரண்டாவது முறையாக பிரதி தொழில் அமைச்சருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. கடந்த வியாழனன்று அமைச்சர் 'நெக்ஸ்ட்' நிறுவனத்தின்முகாமைத்துவத்துடன்பேச்சு நடத்தியிருந்தார். அந்த பேச்சுவார்த்தை குறித்த அறிக்கை எமக்கு வழங்கப்பட்டது.

அதற்கமைய முகாமைத்துவத்தினால் முன்மொழியப்பட்டுள்ள விடயங்களை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை காரணிகளுடன் அமைச்சரிடம் தெரிவித்துள்ளோம். இருதரப்புக்குமிடையில் கையெழுத்திடப்பட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தம் காணப்படுகிறது. அந்த ஒப்பந்தத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய நிறுவன முகாமைத்துவம் செயற்படவில்லை என்பதையும் அமைச்சரிடம் தெரிவித்திருக்கின்றோம்.

இருதரப்பினரையும்ஒரேசந்தர்ப்பத்தில் அழைத்து பேச்சுநடத்துமாறு அமைச்சிடம் கோரியுள்ளோம். அதற்கு அமைச்சரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. எனவே நஷ்டஈடு செலுத்துவதற்கான நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு நிறுவனத்தின் முகாமைத்துவத்துக்கு அறிவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு மீண்டும் தொழிற்சாலையை திறக்கும் நோக்கத்துடன் அடுத்த கட்ட பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் அமைச்சிடம் வலியுறுத்தியிருக்கின்றோம்.

நாம் நஷ்டஈட்டைக் கோரவில்லை. தொழிலையே கோருகின்றோம். தொழில் ஆணையாளரிடம் செல்லாவிட்டால் மேலதிகக் கொடுப்பனவை செலுத்துவதாகநிறுவனம்முன்வைத்துள்ள முன்மொழிவையும் நிராகரித்துள்ளோம். இந்த நிறுவனத்துக்கு ஒரு பில்லியன் யூரோ இலாபம் காணப்படுகிறது. பிரித்தானியாவில் அதிக இலாபமீட்டும் நிறுவனங்களில் 'நெக்ஸ்ட்' நிறுவனம் நான்காவது இடத்திலுள்ளது. நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக எமக்கு ஒருபோதும் அறிவிக்கப்படவில்லை.

இவ்வாறானசந்தர்ப்பங்களில்எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பிலும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தமாகும். அந்த வகையில் அமைச்சரும் குறித்த ஒப்பந்தத்துக்கு அமைய செயற்படுவார் என நம்புகின்றோம் என்றார்.

இதேவேளை, முதலீட்டு சபையும் இணைந்து 'நெக்ஸ்ட்' நிறுவன முகாமைத்துவத்துடன் பேச்சு முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பதை விட, அவர்களது தொழிலைப்பாதுகாப்பதேஆளும்தரப்பின் நோக்கமாகும் என பிரதி தொழில் அமைச்சர்மஹிந்தஜயசிங்க தெரிவித்தார்.

தொழில் அமைச்சில் 'நெக்ஸ்ட்' உற்பத்தி தொழிற்சாலை ஊழியர் சங்கத்துடன் இடம்பெற்ற பேச்சின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழில் அமைச்சு, தொழில் திணைக்களத்துடன் இணைந்து 'நெக்ஸ்ட்' நிறுவனத்துடன் தொடர்ந்தும் பேச்சு நடத்தி வருகிறது. 21 மற்றும் 22ஆம் திகதிகளில் இந்நிறுவனத்துடனும் சர்வதேச முதலீட்டு சபையுடனும் இது குறித்த பேச்சு நடத்தப்பட்டது. சேவையை நிறுத்துவதற்கான ஏற்பாட்டுக்கமைய தாம் நட்டஈட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

அது மாத்திரமின்றி ஊழியர்களின் சேவை காலத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிகக் கொடுப்பனவை வழங்குவதற்கான யோசனையையும் அந்நிறுவனம் முன்வைத்துள்ளது. எவ்வாறிருப்பினும் தொழிலாளர்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. தொழிற்சாலையை மூடுவதைத் தடுத்து அதனை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதே அவர்களது கோரிக்கையாகவுள்ளது.

இருதரப்பினரையும் ஒரே சந்தர்ப்பத்தில் அழைத்து பேச்சு நடத்துவதாக உறுதியளித்திருக்கின்றோம். தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்துடன் சர்வதேச முதலீட்டு சபையும் இந்த பேச்சுக்களில் கலந்துகொள்ளும்.நட்டஈட்டைப்பெற்றுக் கொடுப்பதைவிட தொழிலாளர்களின் தொழிலைப் பாதுகாக்கவேண்டும் என்பதே ஆளும்தரப்பின் நோக்கமாகும்.

கடந்த 2019ஆம் ஆண்டு முதல் சுமார் 10 மில்லியன்டொலர்நஷ்டம்ஏற்பட்டுள்ளதாக அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. எனவேதான் இந்த தொழிற்சாலையை மூட தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஆண்டிகம மற்றும் நவகத்தேகட தொழிற்சாலைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரேசந்தர்ப்பத்தில் இருதரப்பினரையும்சந்தித்தால்மாத்திரமே தீர்வொன்றைக் காண முடியும் என்றார்.

# சிவானந்தா – கோணேஸ்வரா பொன்னணிகளின் சமர் ஆரம்பம்

(சகாதேவராஜா)

மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயம் மற்றும் திருகோணமலை கோணேஸ்வரா இந்துகல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான 30 ஆவது பொன்னணிகளின் கிறிக்கட் சமர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கல்லடி சிவானந்தா மைதானத்தில் நடைபெற்றது.

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் முயற்சியால் ஆரம்பித்த இரு பெரும் பாடசாலைகளின் பொன்னணிகளின் கிறிக்கட் சமர்

ஆரம்ப நிகழ்வு நேற்று காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகியது.

ஆன்மிக அதிதியாக இராமகிருஷ்ண மடத்தின் கல்லடி ஆச்சிரமம் தலைவர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜி கலந்துகொண்டு ஆசி வழங்கினார்.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க.குணநாதன் கலந்து சிறப்பித்தார்.

திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி மற்றும் மட்டக்களப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரன் குமார் ஆகியோர் மற்றும் பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக பாண்ட் வாத்தியம் முழங்க அதிதிகள் வரவேற்கப்பட்டனர்.

பின்னர் மைதானத்தில் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. பின்னர் போட்டி ஆரம்பமானது.



# செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைக்க ஜனநாயகக் கூட்டணி ஆதரவு

## அதன் ஊடகப் பேச்சாளர் துளசி தெரிவிப்பு

செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கே ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி ஆதரவு வழங்கும் என அதன் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாகிய ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளரும், ஊடகப் பேச்சாளருமான க.துளசி தெரிவித்தார்.

வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற ஜனநாயக தேசியக் கூட்டணியின் உயர் மட்டக் குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரதேச சபையைப் பொறுத்த வரை ஐக்கிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. அங்கு ஆட்சி அமைப்பதற்காக எமது ஆதரவைக் கோரியும் உள்ளது. அந்த வகையில், தமிழரசுக் கட்சியும் அங்கு ஆசனங்களைப் பெற்றுள்ளமையால் செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கான முழுமையான ஆதரவை ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி வழங்கும்.

வவுனியா மாநகரசபை அமைக்கும் விடயத்தில் சுயேச்சைக் குழுக்கள் மற்றும் ஏனைய வெற்றி பெற்ற கட்சிகளுடன் பேச்சுக்கள் நடத்தி வருகின்றோம். தமிழரசுக் கட்சி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றுடன் மேற்கொண்ட பேச்சுக்களின் அடிப்படையில் மூன்று கட்சிகளில் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சிகள் ஆட்சி அமைப்பதற்கு உதவுவது என தான் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், செட்டிகுளம் பிரதேச சபையில் இலங்கை தமிழரசுக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. அதற்கு நாம் ஆட்சி அமைக்க ஆதரவு வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இதை விட நீங்கள் எதிர்பார்க்கும் பதில் தேவை எனில் எழுதித் தந்தால் சொல்லலாம் எனவும் ஊடக சந்திப்பு முடிவில் நக்கலாக அவர் பதிலளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

100

# உகந்தைமலை புத்தர் சிலை தொடர்பான விவகாரம் அநுரவின் இன நல்லிணக்கத்திற்கு இடையூறாகலாம்

## திருக்கோவில் வருங்கால தவிசாளர் சசிகுமார் அறிக்கை

(சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயச் சூழலில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரம் ஜனாதிபதியின் இன நல்லிணக்கத்திற்கு ஒரு முட்டுகட்டை போடுவதற்கு சமனானது.

இவ்வாறு திருக்கோவில் பிரதேச சபையின் சுயேச்சை அணித்தலைவரும், தெரிவு செய்யப்பட்ட வருங்கால தவிசாளருமான பிரபல தொழிலதிபர் சுந்தரலிங்கம் சசிகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இவ்விடயம் சம்பந்தமாக மக்களின் பிரதிநிதி என்ற வகையில் ஜனாதிபதி அவர்களின் கவனத்துக்கு கொண்டு செல்ல முடிவு செய்துள்ளேன்.

கதிர்காமம் போல் உகந்தையையும் மாற்ற இடமளிக்க முடியாது.

முருகப்பெருமான் சிலையை நிறுவுவதில் தடங்கல் ஏற்படுத்திய வன ஜீவராசிகள் திணைக்களம் எங்கே போனது? எனவே, நீதியான தீர்வு கிடைக்க வேண்டும். அதனை ஜனாதிபதி உறுதிப்படுத்தவேண்டும். இது விடயமாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வருவேன். -என்றார்.

# மங்களகம பொலிஸ் நிலையத்தினரால் மர நடுகை வேலைத் திட்டம் ஆரம்பம்

(பாறுக் ஷிஹான்)

ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட மங்களகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியானநுவரகலசெனவெள அருகில் நேற்று மங்களகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டீ.எம்.எஸ்.கே தசநாயக்க தலைமையில் மர நடுகை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் பிரிவுப் பொறுப்பதிகாரிநெறிப்படுத்தலில் களுவாஞ்சிக்குடி பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே.எம். ஏ.கே பண்டார உட்பட மங்களகம பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மங்களகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரகல வன பகுதிகளை அழகுபடுத்தும் நோக்குடன் காட்டு வளங்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் பயன்பெறக்கூடிய வகையிலும் இத்திட்டம் முன்னெக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 100இற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் மங்களகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியான நுவரகல வனப்பகுதி பாதுகாக்கப்பட்ட வனமாகவும் யானைகள் நடமாட்டம் அதிகம் உள்ள வனமாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# பூப்பந்தாட்டத்தில் கேஎஸ்ஸி தொடர்ச்சியாக முதலிடம்

(சகாதேவராஜா)



காரைதீவு பிரதேச செயலக மட்ட பூப்பந்தாட்ட போட்டிகளில் காரைதீவு விளையாட்டு கழகம் இம்முறையும் ஆண் பெண் இரண்டுக்குமான போட்டிகளிலும் முதலிடத்தைப் பெற்று சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலக மட்ட விளையாட்டு விழாவின் பூப்பந்தாட்ட போட்டிகள் நிந்தவூர் எம்ஏசி விளையாட்டு பூங்காவில் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.



ஆண்களுக்கான போட்டியில் காரைதீவு வி.க முதலிடத்தையும், இரண்டாமிடத்தை காரைதீவு பூப்பந்தாட்ட வி.க உம் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான போட்டியில் காரைதீவு வி.க முதலிடம் பெற்றுக் கொண்டது.






# பாராட்டு விழா

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருதுகல்விக்கோட்டத்தின் முன்னணி பாடசாலைகளில் ஒன்றான கல்முனை அல்-ஹிலால் வித்தியாலய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் - 2024 விழா அல் ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தேசிய மக்கள் சக்தி தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெட்டு புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் நினைவுச் சின்னங்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர் கௌரவ அதிதியாக கலந்து கொண்டதுடன் விசேட அதிதிகளாக கல்முனை கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச். றியாசா, சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளர் அஸ்மா அப்துல் மலிக், ஓய்வு பெற்ற அதிபர் ஐ.எல்.ஏ. மஜீட், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் பொறியியலாளர் ஏ.சி. கமால் நிஷாத், பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.ஐ.எம். சர்ஜூன், ஆசிரிய ஆலோசகர்கள், ஏனைய பாடசாலை அதிபர்கள், பாடசாலை பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# ஆளும் கட்சி அரசியல் அதிகாரம் காணிகளை பந்தாடுவதற்கும் உத்தியோகத்தர்களை அச்சுறுத்தவும் பயன்படுத்தப்படக்கூடாது

## பூநகரி சம்பவம் குறித்த முன்னாள் தவிசாளர் நிரோஷ் கருத்து

உள்ளூராட்சி மன்றங்களில் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை திட்டமிட்டு திரிவுபடுத்தும் வகையில்செயற்பட்டுமக்களைபிழையாகவழிநடத்தி அரச உத்தியோக்தரின் தொழில் சுதந்திரத்திலும் செயற்பாடுகளிலும் தடை ஏற்படுத்தவதை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில், அப் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்ற நடைமுறைகளுக்கும் சட்டத்திற்கும் அமைவாக செயற்பட்டதனை திசை திருப்பும் வகையில் ஆளுங்கட்சி பிரதேச அரசியல்வாதிகள் கத்தரிக்கப்பட்ட வீடியோ பதிவு ஒன்றை தயாரித்துள்ளனர். அதனை யாழ் - கிளிநொச்சி மாவட்ட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அவர்கள் தனது முகப்புத்தகத்தில் வெளியிட்டுள்ளார். இது பொறுப்புமிக்க பதவியில் இருந்து கொண்டு அரச உத்தியோகத்தர்களை அச்சுறுத்தும் அடாவடித்தனமாகும்.

அடிப்படையில்இவ்விடயம்குறித்தஆராய்கையில், ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரின் அனுசரணையில்கடந்தஉள்ளூராட்சிமன்றத்தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட அரசியல் பிரமுகர் ஒருவர் சட்ட திட்டங்களுக்கு முரணாக, பெறுமதியான வீதியோரக் காணிகளை தனக்கு தேவையானவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இதற்கு அரசாங்க ஒத்துழைப்பு காணப்பட்டுள்ளது. இங்கு மீறப்படும் உள்ளூராட்சி சட்டவிதிகள் தொடர்பில் உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை புறந்தள்ளி அரசியல் அதிகார மமதையில் குறித்த எதிர்த்தரப்பினர் உத்தியோகத்தர்கள் மற்றும் அச் சபையின் பொறுப்பதிகாரி, சபையின் தீர்மானங்களை தற்போது மேற்கொள்ளத்தக்க செயலாளர் மீது பலவந்தத்தினை பிரயோகித்துள்ளனர். பலவந்தத்திற்கு இடமளிக்காத உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி சட்டங்களின் அடிப்படையில் சட்டவிரோத கடைகளை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தமது காணி அபகரிப்பு நோக்கம் நிறைவேறுவதற்கு உள்ளூராட்சி மன்றம் தடையாகவுள்ள நிலையில் அங்கு பிரசன்னமாகியிருந்த உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள் மீது அவதூறு மற்றும் அச்சுறுத்தல் பிரயோகிப்புக்கள் நடைபெற்றுள்ளன. மேலும் தாக்குதல் மேற்கொள்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றினை எல்லாம் மேற்கொண்டுவிட்டு தமது வசதிக்கு ஏற்றால் போல் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அவர்கள் கத்தரிக்கப்பட்ட வீடியோ ஒன்றை தனது முகநூலில் வெளியிட்டுள்ளார். இதனால் உள்ளூராட்சி மன்ற பணியாளர்களின் கௌரவம் மற்றும் தொழிற்சுதந்திரம் அரசாங்க அதிகாரத்தினால் மீறப்பட்டுள்ளது.

இப்படியான அரசாங்கத்தின் அரசியல் அணுகுமுறைகள் ஜனநாயக விரோதமானவை என்பதுடன் சட்டம் ஒழுங்கிற்கும் அப்பாற்பட்டவை.



பிரதேச சபைகளின் உத்தியோகத்தர்களின் தொழிற்சுதந்திரத்தினையும் அவர்களது உரிமைகளையும்மீறுவனவாகும். அரசியல்தலையீடுகள் இன்றி நீதியான முறையில் உத்தியோகத்தர்கள் சேவையாற்றுவதற்கான அகப் புறச் சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பள்ள அரசாங்கத் தரப்பு சற்றேனும் அரசியல் தர்மத்திற்கு இடமளிக்காது மக்கள் விரோத நடவடிக்கைளில் ஈடுபடுவதையே இது காட்டுகின்றது.

நல்லாட்சிக்கான தத்துவம் தொடர்பாக ஆளுங்கட்சி கவனம் செலுத்த வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றங்களின் சுயாதீனம் அரச அதிகாரங்களால் பாதிக்கப்படும் போது அவற்றினை நாம் பார்த்திருக்க முடியாது. - என்றார்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# ஆலையடிவேம்பில் அதிபர் ஆசிரியருக்கு வாள்வெட்டு; திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் கண்டனம்

(சகாதேவராஜா)

ஆலையடிவேம்பில் நேற்று முன்தினம் அதிபர் ஆசிரியருக்கு நடத்தப்பட்ட வாள்வெட்டு சம்பவம் தொடர்பாக

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகுமார் தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

2025 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி எமது கல்வி வலயத்திற்குட்பட்ட திருநாவுக்கரசு வித்தியாலயத்தின் அதிபரும் ஆசிரியரும் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு வெட்டப்பட்ட கொடூரமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். இச்சம்பவம் மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது.

குறிப்பாக இக்கல்வியியலாளர்கள் தமது கடமைகளை அர்ப்பணிப்புடனும், மாணவர்களின் நலனுக்காகவும் செயற்படும் வேளையில் இக்கொடூரமான செயலை கண்டிக்கிறோம். இத்தகைய வன்முறைகள் எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதோடு, இதுபோன்ற செயல்களுக்கு எதிராக அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு நிற்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பான கல்விச் சூழலை உறுதி செய்வதற்காக ஒன்றிணைந்து செயல்படுவோம்.

**சம்பவம் தொடர்பான செய்தி.**

## ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர் மீது வாள் வெட்டு!!

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர் மீது வாள் வெட்டு தாக்குதல் காரணமாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் மாலை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரும் பொது மக்களின் உதவியுடன் அக்கரைப்பற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



குறித்த ஆசிரியரின் கீழ் பாடசாலையில் கல்வி கற்கும் க.பொ.த.சாதாரணதர மாணவர்கள் சிலருக்கு விசேட பயிற்சி செயலமர்வொன்று தம்பட்டையில் இடம்பெறவிருந்தது.

இந்நிலையில் அதிபரின் உத்தரவிற்கு அமைய பி. ப வேளையில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் வீடுகளுக்கு சென்ற ஆசிரியர் நாளைய பயிற்சி செயலமர்விற்கு செல்வதற்கு அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலை முன்பாக ஒன்று கூடுமாறு கூறியுள்ளார்.

இவ்வாறு சில மாணவர்களது வீட்டிற்கு சென்று தகவலை வழங்கிவிட்டு இன்னுமொரு மாணவியின் வீட்டிற்கு சென்று தகவலை சொல்ல முற்பட்ட நிலையில் அவ்வீட்டில் சலசலப்பு சத்தம் கேட்டு தான் சென்ற மோட்டார் சைக்கிளில் திரும்ப எத்தணித்துள்ளார்.

இந்நிலையில் அவ்வீட்டில் இருந்து வெளிவந்த ஒருவர் ஆசிரியரை வாளால் தாக்கி உள்ளதாக அதிபர் கூறினார்.

இதனையடுத்து குறித்த ஆசிரியர் தனக்கு தகவலை வழங்கிய நிலையில் தானும் அவ்விடத்திற்கு சென்றதாகவும் அங்கு ஆசிரியரின் மோட்டார் சைக்கிளை குறித்த நபர் உடைப்பதை அவதானித்ததாகவும் அதிபர் கூறினார்.

உடன் தான் ஆசிரியரை காப்பாற்றி கொண்டு செல்வதற்காக தனது மோட்டார் சைக்கிளில் ஆசிரியரை ஏற்றுவதற்கு முற்பட்டபோது தனது மோட்டார் சைக்கிளையும் உதைத்த நபர் வாளால் தன்னையும் தாக்கியதாக குறிப்பிட்டார்.

இதன் பின்னர் இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகவும் பாதுகப்பற்ற நிலையில் ஆசிரியர்களும் அதிபர்களும் கற்பித்தல் நடவடிக்கையில் எவ்வாறு ஈடுபடுவது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதேநேரம் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் அன்மைக்காலமாக அச்சுறுத்தும் நிலை அதிகரித்து வருவதுடன் வீதிகளிலும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பில்லாத நிலை உருவாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது என்பதுடன் பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுப்பதில்லை என மக்கள் தெரிவிக்கிறார்கள்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.05.2025இல் வெளியிடப்பெற்றது